

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட காந்தளூர் ஊராட்சி எலந்தைப்பட்டி கிராமத்தில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் ஒலிம்பிக் அகாடமி பகுதி ஒன்றிற்கான கட்டுமானப் பணிகளை தமிழக நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.

### தலைமை : செ. திலகராஜ்! வரவேற்புரை : து.கோபிநாத் - வெ.ராதாகிருஷ்ணன்!

# திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## ஆ.இராசா எம்.பி. – க.செல்வராஜ் எம்.எல்.ஏ. – அன்னவயல் கணேசன் – மேயர் ந.தினேஷ்குமார் -- டி.கே.டி.மு.நாகராசன் சிறப்புரை!

திருப்பூர், ஜன. 24 -

திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி, திருப்பூர் வடக்கு, தெற்கு மாநகர மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் திருப்பூர், மருதாசலபுரம் பிரதான சாலை, சிவசக்தி திரையரங்கம் அருகில் வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், 22 வது வார்டு மாமன்ற உறுப்பினர், முதல் மண்டல முன்னாள் தலைவர் வெ.ராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மொழிப்போர்த் தியாகிகள் கே.ஆசம்பாய், சத்தியநாராயணன், பி.பழனிச்சாமி, சி.வேலுச்சாமி, என்.மாரப்பன், பி.எஸ்.மணி, சண்முகம், பி.மதன்கோபால், த.தங்கவேல், வள்ளிநாயகி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு.கார்த்திகேயன், க.அசோக்குமார், இரா.டேவிட் இளவரசன், ஆர்.என்.டி.விவேக், ரேவதி, அருள்பிரகாஷ், வடக்கு மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் வெ.குணா, அ.சூர்யபிரகாஷ், இரா.பிரேம்நாத், வீ.கௌதம் சிவகுமார், அ.கிளாடிஸ் அலெக்ஸ், தெற்கு மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் சி.சுரேஷ்குமார், மு.செல்வகுமார், ச.மதன்குமார், ம.பிரேம் கவின், இரா.செல்லாத்தாள், அண்ணா காலனி பகுதி அவைத்தலைவர் இராயப்பன் (எ) ஈ.மணிகண்டன், துணைச் செயலாளர்கள் பி.மகாமணி, அ.மகுடபதி, கோமதி யுவராஜ், பொருளாளர் க.ரவிகுமார் பகுதி பிரதிநிதிகள் ப.பூபாலன், செ.குப்புசாமி, செ.செல்வராஜ், ப.தேவராஜ், 22வது வட்டக் கழக அவைத் தலைவர் ஆர்.ராஜ், துணைச் செயலாளர்கள் எம்.திருமூர்த்தி, எம்.பூபதி, எஸ்.உஷா, பொருளாளர் கே.மனோகரன், பிரதி நிதிகள் என்.ஆறுமுகம், கே.வேலுசாமி, எஸ்.அப்துல்ஹக்கீம், கே.பழனிசாமி, ஆ.தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், திருப்பூர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் அன்னவயல் கணேசன், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் நெற்கு மாநகர செயலாளர், தொ.மு.ச பேரவை மாநில துணைச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், அண்ணா காலனி பகுதி கழக செயலாளர் மின்னல் அ.நாகராஜ், மாவட்ட அவைத் தலைவர் க.நடராசன், திருப்பூர் வடக்கு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ப.இராமமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர், 3ம் மண்டலத்தலைவர் சி.கோவிந்தசாமி ஆகியோர் சிற ப்புரையாற்று கின்றனர்.

இதில் பகுதி கழக செயலாளர்கள் கொ.இராமதாஸ், மேங்கோ அ.பழனிசாமி, வெ.ஜோதி, போலார் இரா.சம்பத்குமார், மு.க.உசேன், மியாமி ஆ. அய்யப்பன், ப.முருகசாமி, அ.கோவிந்தராஜ், எஸ்.என்.குமார், மண்டலத்தலைவர்கள் ஆர்.கோவிந்தராஜ், வெ.உமா மகேஸ்வரி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர், வழக்கறிஞர் எஸ்.குமார், டிஜிட்டல் எஸ்.சேகர், வழக்கறிஞர் சி.கே.நந்தினி,

பொருளாளர் சு.சாமிநாதன், வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, துணைச் செயலாளர்கள் ஆ.ராமசாமி, வே.செங்குட்டுவன், தேவி முருகேசன், பொருளாளர் அ.சரவணகுமார், தெற்கு மாநகர அவைத்தலைவர் சிட்டி கணேசன், துணைச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார், பி.பாஸ்கரன், கோ.மகாலட்சுமி, பொருளாளர், மாமன்ற உறுப்பினர் ஜி.முத்துகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ்,

கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் இரா.சுப்பையன், கழக மகளிர் அணி பிரசாரக்குழு செயலாளர் செ.உமா மகேஸ்வரி, ஆலோசனைக் குழு உறுப்பினர் மலர் மரகதம், வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.முத்துக் குமார், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.மணி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கி.ரவிச்சந்திரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ம.பார்த்திபன், வடக்கு மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் அ.செல்வராஜ், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் செ.குப்புசாமி, பொதுக்குழு முன்னாள்

உறுப்பினர் சு.சிவ பாலன், வடக்கு மாவட்ட தி.மு.க.சி.வடிவேல், வடக்கு மாநகர அயலக அணி அமைப்பாளர் கோட்டா நா.பாலு உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு சிற ப்பிக்கவுள்ளனர்.

கூட்டத்தின் நிறைவில் தெற்குமாநகர மாணவர் அணி அமைப்பாளர் தெ.விஜய சிம்மராஜா, 22 வது வட்டக் கழகச் செயலாளர் வ.ராஜ்குமார் நன்றியுரையாற்றுகின்றனர்.



தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுடன் நடைபெறும் புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வடமலாப்பூர் ஜல்லிக்கட்டு போட்டியை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து சிறப்பித்தார். நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, த.சந்திரசேகரன், செ. அசோக் பாண்டியன், க.மதியழகன், மு.க. ராமகிருஷ்ணன், எம்.எம்.பாலு, ஐ. எம்.பால்ராஜ், சிப்காட் சந்திரசேகரன், எம்.டி.ராமசாமி மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகரம், 18வது வார்டு கழகத்தின் சார்பில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், நகர்மன்ற உறுப்பினர் வி.கமலக்கண்ணன் ஏற்பாட்டில் மும்மதத்தினர் இணைந்து தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் கே.செல்வராஜ், துணை செயலாளர் பிலோமினா, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர், வழக்கறிஞர் கலைச்செழியன், மாவட்டப் பிரதிநிதிகள் முகமது யூசுப், சீனிவாசன், நகர்மன்ற முன்னாள் துணைத் தலைவர் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவை மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்து 50 மாணவ, மாணவியருக்கு மாதம் 250 ரூபாய் வீதம் ஐந்தாண்டுகளுக்கு அஞ்சல் நிலைய செல்வமகள் திட்டத்தில் தொகை டெபாசிட் செலுத்திய சேமிப்பு பத்திரத்தை வழங்கினார். இதில் நகர்மன்ற உறுப்பினர்கள் ஷாஜிதா, உமா மகேஸ்வரி, சீனிவாசன், நகர்மன்ற முன்னாள் முகமது யூசுப், சுப்பையன், ஐயப்பன் உட்பட மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கல்லூரி மாணவிகள் 'அப்பா' என்று அழைத்து உற்சாகம்! நெகிழ்ச்சி!

# சிவகங்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சி வரவேற்பு!

## அரசு வழங்கும் உதவிகளை எடுத்துக்கூறி நன்றி – பெருமிதம்!



சிவகங்கை, ஜன. 24 -

சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் களஆய்வு மேற்கொண்டார். இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் கள ஆய்வு மேற்கொள்வதற்காக சிவகங்கை சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. காரைக்குடியில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் குன்றக்குடி பகுதியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், தி.மு.க.வினர் பூர்ண கும்ப மரியாதை அளித்து, மலர் தூவி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்றனர்.

தொடர்ந்து திருப்பத்தூர் பைபாஸ், அரளிக்கோட்டை, ஒக்கூர், பெருமாள் பட்டி, சோழபுரம், மதுரை முக்கு உள்ளிட்ட பகுதி களிலும், வழிநெடுகிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அரளிக்கோட்டை பகுதியில், சிலம்பம் பயிற்சி பள்ளி மாணவர்கள் சிலம்பாட்டத்துடன் வரவேற்பு அளித்தனர்.

சோழபுரம் பகுதியில் கல்வியின் விடிவெள்ளியே என்ற பதாகைகளுடன் கல்லூரி மாணவிகள் வரவேற்றனர். அப்போது, வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மாணவியருடன் உரையாடினார்.

இதனிடையே, சிவகங்கை அரசு விழாவில் பங்கேற்க சென்றபோது வரவேற்பு அளித்த மாணவிகளை சந்தித்து கலந்துரையாடியது நெகிழ்ச்சி ஏற்ப டுத்தியதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் சாலையின் இருபுறமும் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நின்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்ற நிலையில், புதுமைப் பெண் திட்டத்தை செயல்படுத்தி மாதந்தோறும் உதவித் தொகை வழங்கி வரும் முதலமைச்சருக்கு, மனமார்ந்த நன்றிகள் என மாணவிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவும் மாணவிகள் நன்றி கூறினர். அப்போது, மாணவிகள் முதலமைச்சரை 'அப்பா' என அழைத்து நெகிழ்ந்தனர்.

### வே.மதிமாறன் - மதுரை சேவியர் சிறப்புரை!

# தஞ்சை தெற்கு மாவட்டத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஜன. 24 -

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க மற்றும் மாணவர் அணி சார்பில் பேராவூரணியில் நடைபெற உள்ள மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சித்த ஒன்றிய அரசை எதிர்த்து, தன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளை போற்றிட தி.மு.கழக மாணவர் அணி சார்பில் ஆண்டுதோறும் நாளை (ஜனவரி 25 ) மொழிபோர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இந்தவருடமும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாணவர் அணி நாளை (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 06.00 மணிக்கு பேராவூரணி, காந்தி பூங்கா அருகில் மொழிபோர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் மதுரை சேவியர் ஆகியோர் வீரவணக்க உரையாற்றுகின்றனர்.

அதுசமயம் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி.வே. செந்தில்குமார்

**சனவரி 24 (2010)**



இளம்பிராயத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இரண்டு முறை கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்க துணைத் தலைவராகவும், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட விற்பனைக் குழு இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக ஜெ. அரசால் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட போது, மறியலில் ஈடுபட்டதற்காக இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**